# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

# SET 5

**விடிவெள்ளி 5**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**.பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

[ *பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்* ]

**கீழ்க்காணும் உரைநடையை மாற்றி அதனை உரையாடல் வடிவில் எழுதுக.**

[யாழினியும் கயல்விழியும் பள்ளி நூலகத்தில் சந்தித்து உரையாடுகின்றனர்]

யாழினி, தோழி கயல்விழிக்குக் வணக்கம் கூறி அவள் கையிலிருந்த விளக்கக் கையேட்டைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பினாள். கயல்விழியும் வணக்கம் கூறி, முந்தைய தினம் வங்கி அதிகாரிகள் பள்ளிக்கு வந்து வங்கி சேமிப்புத் திட்டம் பற்றி எல்லா மாணவர்களுக்கும் விளக்கம் அளித்ததாகவும இத்திட்டம் சிறப்பாக இருந்ததால் அதில் சேர்வதற்கான விண்ணப்பப் பாரத்தை ஆசிரியரிடம் சேர்ப்பித்ததாகவும் கயல்விழி கூறினாள்.

யாழினி முந்தைய தினம் பள்ளிக்கு வரவில்லை. அத்திட்டம் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. வங்கி சேமிப்புத் திட்டத்தைப் பற்றி விளக்கமாகக் கூறும்படி யாழினி கேட்டுக் கொண்டாள். வங்கி சேமிப்புத் திட்டத்தில் பங்கு பெறும் மாணவர்களுக்காகப் பல திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர். பல்வேறு போட்டிகள், விடுமுறை காலப் பயிற்சிகள், கல்வி சுற்றுலாக்கள் ஆகியவையும் அத்திட்டத்தில் அடங்கும். மாணவர்களுக்காக வங்கி வெளியிடும் மாணவர் மன்ற இதழை இலவசமாகப் பெற முடியும். புதிர்ப்போட்டிகளை ஏற்பாடு செய்து பரிசுகளும் வழங்குகின்றனர். இவை யாவும் வங்கி சேமிப்புத் திட்டம் பற்றி கயல்விழி கூறிய விளக்கங்களாகும்.

கயல்விழியின் விளக்கத்தைக் கேட்ட யாழினி மகிழ்ச்சி அடைந்தாள். அத்திட்டத்தில் அதைத் தவிர வேறு என்ன நன்மைகள் பெறலாம் என அறிய விரும்பினாள்.

அத்திட்டத்தின்வழி மாணவர்கள் மாதந்தோறும் ஐம்பது ரிங்கிட் சேமிக்க வேண்டும். மாணவர்கள் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்றால் உயர்கல்வி பெறக் கடனுதவி வழங்கப்படுகிறது. மாதந்தோறும் அவர்கள் செலுத்தும் ஐம்பது ரிங்கிட் அதை ஈடு செய்கிறது. அதைத் தவிர இருபத்து நான்கு மணி நேரமும் காப்புறுதிச் சலுகை வழங்கப்படுகிறது. விபத்துகள் ஏற்பட்டால் இழப்பீட்டுத் தொகையும் மருத்துவச் செலவும் வழங்குகிறார்கள் என்ற விவரங்களையும் யாழினி தெரிந்து கொண்டாள்.

யாழினி தன் பெற்றோரிடம் அத்திட்டம் பற்றி விளக்கி, வங்கி சேமிப்புத் திட்டத்தில் பங்கு பெற உறுதி பூண்டாள்.

[ 30 புள்ளி ]

**உரையாடலைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- உரையாடல் வடிவில் இருத்தல்
- சூழல் எழுதப்பட்டிருத்தல்
- முகமன் எழுதப்பட்டிருத்தல்
- ஒருவர் குறைந்தது இரு முறையாவது பேசியிருத்தல்
- இருவரும் குறைந்தது மூன்று முறை கருத்துப் பரிமாற்றம் செய்திருத்தல்
- குறைந்தது உரைநடையிலுள்ள ஐந்து கருத்தைப் பேசியிருத்தல்
- உரையாடலுக்குரிய குறியீடுகளும் உணர்ச்சிகளும் வெளிப்படுத்தப்பட்டிருத்தல்
- விடைபெறுதல் / முடிவு இருத்தல்

**விடிவெள்ளி 5**

**தனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

## பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

**5** மாவட்ட அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டுள்ளீர்.

அந்த ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தை **வருணித்து** எழுதுக.

**[ 70 புள்ளி ]**

**விடிவெள்ளி 5**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**

[ 20 புள்ளி ]

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள **மரபுத்தொடரைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**ஈவிரக்கம்**

[ 2 புள்ளி ]

17 கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கேற்ற **பழமொழியை** எழுதுக.

முன்னர் நாம் செய்த செயலின் பலனைப் பின்னர் நாம் அடைவது உறுதியாகும். நன்மை செய்யின் நன்மை விளையும்; தீமை செய்யின் தீமை விளையும்.

[ 2 புள்ளி ]

18 கொடுக்கப்பட்டுள்ள **செய்யுளடிகளின் பொருளை** எழுதுக.

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;

[ 4 புள்ளி ]

19 கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

சிறுவயதிலேயே கல்வியில் நாட்டமின்றி இருந்தான் முகிலன். தனது பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திய அவன் நண்பர்களோடு இணைந்து ஊர் சுற்றித் திரிந்தான்; கிடைக்கும் வேலையைச் செய்து வந்தான். வளர்ந்து பெரியவனானதும் வருமானமின்றி தன் அன்றாடச் செலவீனங்களைச் சமாளிப்பதற்குச் சிரமப்பட்டான்.
( I இணைமொழி )

நண்பர்களின் உதவியோடு அன்றாட வாழ்க்கை பயணம் தொடர்ந்தது. பணம் தேவைப்படும்போது மட்டுமே தினக் கூளியாகக் கிடைக்கும் வேலையைச் செய்து வந்தான். தனக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக மருத்துவரைக் காண எண்ணினான். மருத்துவச் செலவுக்குப் பணம் வேண்டுமே! என்ன செய்வதென்று ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த சமயத்தில் அவனுடைய நண்பன் அவனைக் காண வந்தான்.
( II உவமைத்தொடர்)

நண்பனிடமிருந்து பணத்தைக் கடன் வாங்கிக் கொண்டு மருத்துவரைக் காண விரைந்தான். மருத்துவப் பரிசோதனை முடிந்ததும் மருத்துவர் அவனைத் தொடர் சிகிச்சைக்கு வருமாறு பணித்தார். அவ்வேளையில்தான் அவனுக்குப் பணத்தின் அருமை தெரியவந்தது. தன்னிடம் போதுமான கல்வியறிவு இல்லாததும் நிரந்தர வேலை இல்லாததும் அவனை வேதனையடையச் செய்தது. இனியாவது ஒரு நிலயான வேலையைத் தேடிக் கொண்டு தன் வருங்கால வாழ்க்கைக்குச் சிறுகச் சிறுகப் பணத்தைச் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ( III பழமொழி )

தன்னைப்போன்று இருக்கும் இளைஞர்கள் இனி இப்படி வாழக்கூடாது என்று எண்ணம் கொண்டான். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அவர்கள் கையில்தான் இருக்கிறது என்பதை பிறருக்கு உணர்த்த விரும்பினான். புகழ் உண்டாகுமாறு வாழ்வதும் பிறர் தூற்ற வாழ்வதும் நாமாக அமைத்துக் கொள்ளும் வாழ்க்கையைப் பொருத்தே இருக்கிறது என்பதை உணர்ந்து புதிய வாழ்க்கை பாதையைத் தொடங்கினான் முகிலன்.
( IV திருக்குறள் )

[ 12 புள்ளி ]

**விடிவெள்ளி 5**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**விடைப்பட்டி**

16 ஏற்புடைய வாக்கியம்.

17 முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

18 இங்கு என்னோடு வந்துள்ள இளங்கொடி போன்ற இவளுடைய அழகிய சிறிய அடிகளை இதற்கு முன்னர் நிலமகளும் அறிந்திருக்கவில்லை.

19 i ) வரவு செலவு

ii ) கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல

iii ) ஒரு காசுப் பேணின் இரு காசு தேறும்

iv ) புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்